## பொருள் சம்பாதிப்பதற்கான ஹலாலான (அனுமதிக்கப்பட்ட) வழிகள்

முஸ்லிம்கள் அவர்கள் பொருளை சம்பாதிப்பதில் சரியான வழிமுறை மற்றும் தவறான வழிகள் ஆகியவற்றிற்கிடையிலான வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக்கொள்ள சம்பாதிக்கும் ஹலாலான வழிகள்:

### 1 அனுமதிக்கப்பட்ட பணிகள்

உதாரணமாக, விவசாயம், வியாபாரம், தொழில் மற்றும் கைத்தொழில் ஆகியன. அனுமதிக்கப்பட்டதொழிலைச் செய்வதன் மூலம் ஒருவர் வேலையின்மையிலிருந்து பாதுகாக்கப்படுவதோடு அவருடைய உடல் வலிமை மற்றும் ஆற்றல்கள் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளில் பயன்படுகின்றன. அல்லாஹ்வின் கட்டளைகள் நிறைவேற்றப்படுவதோடு பூமியில் மறைந்து கிடக்கும் பொக்கிஷங்களையும் கண்டெடுக்கின்றான், உதாரணமாக, கனிமங்கள், பெட்ரோல் ஆகியன.

இறைத்தூதர் ﷺ அவர்கள் மற்றும் அவர்களுடைய நபித்தோழர்கள் பல்வேறு பணிகளைச் செய்துவந்தனர். ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் தங்களுடைய கரங்களினால் வேலை செய்து சம்பாதித்துத் தன்னுடைய தேவைகளுக்காகச் செலவு செய்தார்கள். அவர்களை முஸ்லிம்கள் க்ஹலீஃபாவாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் இப்பொறுப்பினை ஏற்பதற்காக முழுவதுமாகவே தயாராகவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

كَانَ أَصْحَابُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ عُمَّالَ أَنْفُسِهِمْ، وَكَانَ يَكُوْنُ لَهُمْ أَرْوَاحُ، فَقِيْلَ لَهُمْ : لَوْ اغْتَسَلْتُمْ (البخاري)

பொருள்: இறைத்தூதர் ﷺ அவர்களுடைய தோழர்கள் தங்கள் கரங்களினால் உழைத்து சம்பாதித்தார்கள் மற்றும் (இதன் காரணமாக) அவர்களுடைய உடல்களில் நாற்றம் உண்டாகும், அவர்களுக்குக் கூறப்படும் நீங்கள் குளித்து இருக்கலாமே என்று (புக்ஹாரி)

### 2 வாரிசுகளின் பங்கு

இதன் மூலம், வாரசுகளுக்காக விட்டுச்செல்லும் சொத்து ஷரீஃஅத் நிர்ணயித்துள்ள அடிப்படை விதிகளுக்கேற்ப இறந்தவருடைய வாரிசுகள் கட்டுப்பாட்டில் சென்றடைந்துவிடும்.

### 3 ஹிபா முறையில் வழங்கப்படுதல்

ஒரு மனிதன் தன்னுடைய சொத்தின் ஒரு பகுதியை எவருக்கும் எவ்விதப் பிரதிபலனுமில்லாது அன்பளிப்பாக வழங்கினால், இந்த ஹிபா செய்யப்பட்ட சொத்து அதனைப் பெற்றுக்கொள்பவருடைய சொத்தாக மாறிவிடும்.

### 4 வஃக்ஃபு செய்தல்

வஃக்பு செய்யப்பட்ட சொத்திலிருந்து மக்கள் பயனடையும் உரிமை மட்டும் இருக்கும், ஆனால், அதனை விற்கவும் முடியாது, வாரிசுகளுடைய சொத்தாகவும் மாற்றமுடியாது. சில சமயங்களில் உற்றார் உறவினருக்காகவும் அவர்களுடைய மறைவுக்குப்பின் ஏழை எளியவர்களுக்காகவும் வஃக்பு செய்யப்படும் மற்றும் சில சமயங்களில் ஒரு நல்ல பணிக்காக வஃக்பு செய்யப்படும், உதாரணமாக ஒரு பள்ளிவாசல், மத்ரசா அல்லது மருத்துவமனை கட்டுவதற்காகவோ அல்லது மற்ற பொதுநலப் பணிக்கான திட்டத்திற்காகவோ வஃக்பு செய்யப்படும்.

### 5 வஸிய்யத் செய்தல் (உயில்)

வஸிய்யத் என்பது ஒருவர் தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியை மற்ற ஒருவருக்காக அவருக்குப்பின் அளிக்கப்படவேண்டும் என்று வஸிய்யத் செய்வதாகும். இந்த வஸிய்யத் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்கவேண்டும். வஸிய்யத் செய்தவர் இறந்துவிட்ட பின்பே எவருக்காக வஸிய்யத் செய்யப்பட்டதோ அவர் அதற்கான வாரிசாக ஆகிவிடுவார்.

### 6 ஙகனீமத் எனப்படும் போர்ப்பொருட்கள்

இஸ்லாத்தின் எதிரிகளிடமிருந்து போரின் விளைவாக கிடைக்கப்பெறும் பொருள் ஙகனீமத் எனப்படும். அல்லாஹ் ஙகனீமத் மூலம் பெறப்படும் பொருட்களை முஸ்லிம்களுக்கு ஹலாலானதாக ஆக்கியுள்ளான்.

### 7 ஃபய் எனப்படும் பொருட்கள்

ஙகனீமத் எனப்படும் எதிரிகளிடமிருந்து போர்புரியாமலேயே பெறப்படும் பொருள் ஃபய் எனப்படும். இதில் முஸ்லிம்கள் எவ்விதக் கஷ்டமும் இன்னல்களும் எதிர்கொள்ளத் தேவைப்படுவதில்லை

## பொருள் சம்பாதிப்பதற்கான ஹராமான (தடுக்கப்பட்ட) வழிகள்

### 1 வட்டி

*அல்லாஹ் தஆலா வட்டியின் அனைத்து வகைகளையும் ஹராமான வையாக ஆக்கியுள்ளான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்*

وَأَحَلَّ ٱللَّهُ ٱلْبَيْعَ وَحَرَّمَ ٱلرِّبَوٰا۟ ﴿٢٧٥﴾ (البقرة:275)

*பொருள்: உண்மையில், அல்லாஹ் வியாபாரத்தை (ஹலால்) அனு மதிக்கப்பட்டதாகவும், வட்டியை (ஹராம்) தடுக்கப்பட்டதாகவும் ஆக்கியுள்ளான் (அல் பஃகரஹ்:275).*

### 2 பதுக்கல்

*இஸ்லாத்தில் பதுக்கல் (ஹராம்) தடுக்கப்பட்டதாக ஆக்கப்பட்டுள் ளது, இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

مَنِ احْتَكَرَ فَهُوَ خَاطِئٌ (مسلم، أبو داؤد، إبن ماجة)

*பொருள்: எவர் ஒருவர் பொருட்களைப் பதுக்கல் செய்கின்றாரோ அவர் பாவச்செயலைச் செய்துள்ளார் (முஸ்லிம், அபூ தாவூத், இப்னு மாஜா)*

### 3 அநீதியிழைத்தல்

*ஒரு முஸ்லிம் எவர் ஒருவருடைய பொருளை அநீதியான முறையில் வலுக்கட்டாயமாக அபகரித்துக்கொள்வது அனுமதிக்கப்பட்டதல்ல. அல்லாஹ் தஆலா கூறுகிறான்*

وَلَا تَعْتَدُوٓا۟ ۚ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ ٱلْمُعْتَدِينَ ﴿١٩٠﴾ (البقرة:190)

*பொருள்: ஆனால், நீங்கள் வரம்பு மீறாதீர்கள், ஏனெனில், வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை (அல் பஃகரஹ்:190).*

### 4 இலஞ்சம்

*ஒரு முஸ்லிம் லஞ்சம் வாங்கி பொருள் சேர்ப்பாரேயானால் அது ஹராமானதாகும், அவர் அல்லாஹ்வுக்கு முன்பாகக் குற்றம் புரிந்த வராகக் கருதப்படுவார். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

لَعَنَ اللهُ الرَّاشِيْ وَالْمُرْتَشِيْ (أبو داؤد، الترمذي)

பொருள்: அல்லாஹ் தஆலா லஞ்சம் கொடுப்பவர்கள் மற்றும் அதனைப் பெறுபவர்கள் அனைவரையும் சபிக்கின்றான் (அபூ தாவூத், திர்மிதி).

مَن غَشَّ فَلَيْسَ مِنَّا (مسلم، أبو داؤد، الترمذي)

பொருள்: எவர் ஒருவர் ஏமாற்றுகின்றாரோ அவர் நம்மைச் சார்ந்தவரல்ல (முஸ்லிம், அபூ தாவூத், திர்மிதி).

ஒரு முஸ்லிம் சந்தேகத்திற்கிடமானவற்றிலிருந்து விலகியே இருப்பது அவர்மீது கடமையானதாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنِ اتَّقَى الشُّبُهَاتِ فَقَدْ اسْتَبْرَأَ لِعِرْضِهِ وَدِيْنِه (البخاري، مسلم)

பொருள்: எவர் ஒருவர் சந்தேகத்திற்கிடமானவற்றிலிருந்து விலகி இருப்பாரோ, அவர் தன்னுடைய கண்ணித்தையும் மார்க்கத்தையும் தீங்கிலிருந்து காப்பாற்றிக்கொண்டார் (புக்ஹாரி, முஸ்லிம்).

## பொருளை முதலீடு செய்து பொருளீட்டுதல்

ஒரு நாட்டில் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதிலும், தனிநபர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் அந்நாட்டு மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளையெல்லாம் குறைத்துக்கொள்வதிலும் செல்வத்தின் பங்கு மிக முக்கியமானதாகும். நபித்தோழர்கள் வியாபாரம் மற்றும் வேறு தொழில்களைச் செய்துவந்தனர், அதன் மூலம் அவர்கள் தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிவந்தனர். இறைத்தூதர் ﷺ அவர்களும் அவர்களுடைய தோழர்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து நாடுபெயர்ந்தபோது அவர்கள் தங்களுடைய செல்வம் மற்றும் சொத்துக்களையெல்லாம் மக்காஹ்விலேயே விட்டுவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது. இறைத்தூதர் ﷺ அவர்கள் முஹாஜிரீன்களான இவர்களுக்கும் அன்ஸார்களுக்குமிடையே சதோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். முஹாஜிரீன்களில் ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) மற்றும் அன்ஸார்களிலிருந்து ஹஜ்ரத் ஸஃஅது பின் ரபீஃஉ (ர) அவர்களை சகோதரர்களாக ஆக்கினார்கள். ஹஜ்ரத் ஸஃஅது பின் ரபீஃஉ (ர) அவர்கள் தன்னுடைய சொத்தில் பாதியை ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) அவர்களுக்குப் பிரித்துக்கொடுக்க முற்பட்டார்கள், அதற்கு ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) அவர்கள் தன்னுடைய சகோரரிடம் கூறினார்கள், அல்லாஹ் உங்களுடைய செல்வம் மற்றும் மனைவி மக்கள் மீது அருள் பொழியட்டும், நீங்கள் இங்குள்ள சந்தைக்கு செல்வதற்கான

*வழியை மட்டும் காட்டுங்கள். ஹஜ்ரத் ஸஃஅது பின் ரபீஃஉ (ர) அவர்கள் சந்தைக்கு செல்லும் வழியினைக் காட்டினார்கள், ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) அவர்கள் சந்தைக்குச் சென்றார்கள், அங்கே வியாபரத் தைத் துவங்கினானர்கள், இதன் மூலம் அவர்களிடத்தில் மிகப்பெருமள வில் செல்வம் குவிந்துவிட்டது. அவர்கள் முஸ்லிம்களில் மிகப்பெரும் செல்வந்தராகக் கருதப்பட்டார்கள். அவர்கள் தன்னுடைய செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவழித்து வந்தார்கள்.*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) அவர்களிடம் கூறினார்கள்:*

**عَمْرُو، نِعْمَ الْمَالُ الصَّالِحُ لِلْمَرْءِ الصَّالِحِ** (أحمد)

*பொருள்: ஃஅம்ரு அவர்களே, ஹலாலான செல்வம் ஒரு ஸாலிஹான மனிதரிடம் எவ்வளவு சிறப்புமிக்க அருட்கொடையாக இருக்கின்றது பாரும் (அஹ்மத்).*

*பொருள் விவசாயம், தொழில்துறை மற்றும் கட்டிடங்களைக் கட்டுவதற் காக செலவு செய்யப்படுகின்றது, அத்துடன் மற்ற செயல்களுக்காகவும் செலவு செய்யப்படுகின்றது, உதாரணமாக, நிலப்பரப்புக்களை வளமை மிக்கதாக ஆக்குவதற்காகவும் மனிதர்களைச் சீர்த்திருத்துவதற்காகவும் செலவு செய்யப்படுகின்றது. ஆனால், செல்வம் ஹராமான தடுக்கப்பட்ட வியாபாரங்கள் அல்லது சமுதாயத்தினர்களுக்கு தீங்கு விளைவித்து அவர் களை நஷ்டத்திற்கு ஆளாக்கிவிடும் செயல்களுக்குப் பயன்படுத்துவதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை.*

* * *